Minutes of the **Public Hearing** conducted on **19.01.2024** at 11.00 A.M. at SPR Mahaal, Munainjiputti Main Road, Lakshmi Narayanapuram, Serakulam Panchayat, Srivaikundam Taluk, Thoothukudi District for the proposed Rough Stone & Gravel Quarry namely ***M/s. K. Subbiah Rough Stone and Gravel Quarry over an extent of 4.21.5 Ha located at S.F.No. 507 & 508, Therkukaraseri Village, Srivaikundam Taluk, Thoothukudi District***

**Participants:**

| | | |
|---|---|---|
| 1. | Tmt. A. Marimuthu | Special District Revenue Officer (ISRO-Land Acquisition), Thoothukudi. |
| 2. | Thiru. J. Hamoneth Joesun, | District Environmental Engineer (i/c), Tamil Nadu Pollution Control Board, Thoothukudi. |
| 3. | Project Proponents and their representatives and the public | As per Attendance Register (A copy of the Attendance Register is attached in Annexure - II). |

At the outset, the District Environmental Engineer (i/c), Tamil Nadu Pollution Control Board, Thoothukudi welcomed the esteemed Special District Revenue Officer, SIPCOT, Thoothukudi who was present to preside over the public hearing meeting and also welcomed the project proponent and their representatives and all the public who were present to attend the public hearing meeting and explained the purpose of the meeting and also about the project. The details about the project, Environmental Management Plan and the mitigation measures to prevent the pollution related issues were explained on behalf of the Proponent by the Technical expert of the project. After this, the public expressed their views.

**I. Following are the views expressed by the public during the Public Hearing meeting:**

**1. Thiru. Muthuramalingam, Serakulam village.**

- On behalf of farmers utilizing irrigation water, we welcome this proposed rough stone quarry project.

**2. Thiru. Nallamuthu, Ex- Union Secretary, Ramanujambudhur village.**

- This quarry will create employment opportunities in our locality.
- I welcome the establishment of this proposed rough stone quarry project. Since the proposed site lies in an undisturbed area for a radius of 10 Kms. Hence there will be no impact to the Environment, wildlife and Cultivation of Crops.

3. **Thiru. Sundarraj, Therkku Karaseri village**

- ❖ I am a farmer and our village youngsters are suffering a lot due to lack of employment opportunities.
- ❖ Hence, I welcome this proposed rough stone quarry project since it will create employment opportunities in our village.

4. **Thiru. Srirangan Arunachalam, President, Ramanujambudhur village**

- ❖ No issues for the establishment of this proposed rough stone quarry project and it benefits us.
- ❖ I welcome this proposed rough stone quarry project since, Quarry management will help us to satisfy our construction material needs.

5. **Thiru. Pungan, District Congress President, Karungulam Village.**

- ❖ I welcome this proposed rough stone quarry project since, it will generate employment opportunities to the public residing around 10 Km radius.

6. **Thiru. Chinnadurai, Councilar, Serakulam village**

- ❖ I welcome this proposed rough stone quarry project.

7. **Thiru. S. Gandhi, Ramanujampudhur village.**

- ❖ I am delighted for the opportunity offered to participate and speak at this event organized by the officers of the Tamil Nadu Pollution Control Board and assure that there is no objection for this proposed rough stone quarry project.

8. **Thiru. Ulaganathan, Arasarkulam Village.**

- ❖ We are in Arsarkulam village and running a company named as M/s. Pothigai for manufacturing hollow block, paver block, plastering and concrete products.
- ❖ This proposed rough stone quarry project will aid to procure raw materials in lowest cost and it will generate more employment opportunities to the public. Hence, I welcome this proposed rough stone quarry Project.

9. **Tmt. Shanmugasundari, Ramanujampudhur village.**

- ❖ I welcome this proposed rough stone quarry project since the quarry project will be beneficial for us.

10. **Thiru. Udaiyar, DMK wing Secretary, Mela Sriyandhur village**

- ❖ No issues for the establishment of this proposed rough stone quarry project and it benefits us.
- ❖ Hence, I am proud to welcome this proposed rough stone quarry project since the quarry will be beneficial for us.

**11. Thiru. Vanamamalai, Sinnarkulam village.**

- I welcome this proposed rough stone quarry project since it will generate employment opportunities for 1000 peoples in this area.

**12. Thiru. Sathish, Environment Secretary, Hyderabad, Andhra Pradesh.**

- I respect the ritual and cultural debates. Government should resolve the problem by adopting this village and allotting funds to ensure the sustainable development.
- To create jobs and employment opportunities immediately.
- I request the higher officials of this Government to provide permanent houses to the all public.
- As an Environment Secretary, I request that this village should have good environment and greenery.
- I am asking that, this village peoples should plant more trees in this village and protect it. Also, I am requesting Government higher officials to provide rights to the people to plant more trees in their village.
- I request the Government higher officials to provide bank loans and process their files and grant Environmental Clearance without delay.
- This proprietor of the rough stone quarry is helping poor peoples, working honestly and abiding the justice. He is helping others and qualified students for their higher studies apart from his employees.
- He is providing employment to the unemployed peoples. Helping to the patients for their medical treatment and many of the families benefiting directly and indirectly through him.
- Finally, I welcome this proposed rough stone quarry project and conveying wishes and thanks to the project proponent.
- Also, I request the proposed rough stone quarry project proponent should develop and growth further level to attain excellent positions and to do the best services to the public.

**13. Thiru. Anith, Vettikulam village.**

- I welcome this proposed rough stone quarry project since, we aware that the roads are damaged due to recent rain flood in our area.
- Further, we have carried out the road repairing works with stone chips and gravel sourced from nearby rough stone quarries. Hence, we happily welcome the proposed rough stone quarry project in our village area.

**II. Concluding remarks by the District Environmental Engineer (a/c).**

The District Environmental Engineer (i/c) consolidated the views received regarding the establishment of quarries such as employment opportunities for local residents and educated youths. Then the meeting was

concluded by thanking all those who have attended the public hearing. The District Environmental Engineer (i/c) also stated that the minutes of the meeting will be sent to SEIAA through the Tamil Nadu Pollution Control Board Head office.

**III.** The views/comments received from the public in writing (21 Nos.) in support of this proposed project are enclosed herewith (Annexure-III).

**IV.** No views/comments received from the public in writing against the proposed project.

**The following documents are enclosed herewith in connection with the public hearing:**

1. Pendrive consisting of the Recorded Video (2-Nos) of the entire public hearing proceedings (Annexure – I).
2. List of participants who attended the public hearing (Annexure – II).
3. Written views/comments received for this project (Annexure – III).

29/01/2024.

District Environmental Engineer (i/c),
Tamil Nadu Pollution Control Board,
Thoothukudi.

29/1/2024

Special District Revenue Officer,
(ISRO-Land Acquisition),
Thoothukudi.

ANN - I

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தாலுகா, தெற்கு காரசேரி கிராமம், புல எண்: 507 & 508, 4.21.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமையவுள்ள முன்மொழியப்பட்ட திட்டமான தி/எ். K. சுப்பையா கல் மற்றும் சரளை குவாரி என்ற திட்டத்திற்கு 19.01.2024 காலை 11.00 மணிக்கு தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தாலுகா, லட்சுமி நாராயணபுரம், சேரக்குளம் பஞ்சாயத்து, முனைஞ்சிபட்டி மெயின் ரோடு, எஸ்.பி.ஆர், மஹாலில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்ட நடவடிக்கை பற்றிய விவரங்கள்:

**பங்கேற்றவர்கள்:-**

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. அ. மாரிமுத்து | தனி மாவட்ட வருவாய் அலுவலர், (ISRO நில எடுப்பு), தூத்துக்குடி. |
| 2. | திரு.ஜே.ஹேமந்த் ஜோசன் எம்.டெக்., | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி. |
| 3. | தொழிற்திட்ட உரிமையாளர்கள் மற்றும் அவரது பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | வருகை பதிவேட்டின் படி, (வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது) இணைப்பு - II |

முதலாவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி அவர்கள் இந்த கூட்டத்தை தலைமை ஏற்று நடத்த வருகை தந்த மதிப்பிற்குரிய தனி மாவட்ட வருவாய் அலுவலர், (ISRO நில எடுப்பு), தூத்துக்குடி அவர்களையும், இத்தொழிற்திட்டத்தின் உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகளையும் கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தந்த அனைத்து பொதுமக்களையும் வரவேற்று இந்த கூட்டம் நடைபெறவுள்ளதின் நோக்கத்தையும் இந்த திட்டம் பற்றியும் எடுத்துரைத்தார். அதன்பின்பு இந்த திட்டம் பற்றி தொழிற்சாலையின் சார்பாக தொழில்நுட்ப விளக்கங்கள் மற்றும் எதிர்ப்பார்க்கப்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்துவிளக்கப்பட்டது. பின்பு பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.

**I.இந்த கூட்டத்தில் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பின்வருமாறு:**

**1. திரு. முத்துராமலிங்கம், சேரகுளம்.**

- ❖ பாசன நீர் பயன்படுத்தும் விவசாயிகள் சார்பாக இந்தத் திட்டத்தினை வரவேற்கிறோம்.

**2. திரு. நல்லமுத்து, முன்னாள் திராவிட முன்னேற்ற கழக ஒன்றிய செயாளர், இராமானுஜம்புதூர்.**

- ❖ இந்த கல்குவாரியினால் இந்த பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.
- ❖ இந்த கல்குவாரியானது, 10 கிலோமீட்டர் சுற்றளவிற்கு எவ்வித இடையூறுமின்றி அமைவதாலும், வனவிலங்கிற்கும் மற்றும் பயிர் பாதுகாப்பிற்கும் சுற்றுச்சூழல் பாதிப்புமின்றி அமைவதால் இந்த கல்குவாரி அமைவதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

**3. திரு. சுந்தரராஜ், தெற்கு காரசேரி.**

- ❖ நான் ஒரு விவசாயி, எங்கள் பகுதியில் அதிக இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி உள்ளனர். இக்கல்குவாரி அமைவதால் வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆதலால், இந்த கல்குவாரி அமைவதை வரவேற்கிறேன்.

4. **திரு. ஸ்ரீரங்கன் அருணாச்சலம், ஊராட்சி மன்ற தலைவர், இராமானுஜம்புதூர்.**

- ❖ இந்த கல்குவாரி அமைவதால் எந்த இடையூறுமில்லை. இந்த கல்குவாரி அமைவதால் நமக்கு பயன் ஏற்படும்.
- ❖ இந்த கல்குவாரி அமைவதால் எங்களுக்கு சரளை கற்கள் தேவைப்படும் போது அவர்கள் நமக்கு உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த கல்குவாரி அமைவதை நான் வரவேற்கிறேன்.

5. **திரு. புங்கன், வட்டார காங்கிரஸ் தலைவர், கருங்குளம்**

- ❖ தூத்துக்குடி மாவட்டம், தெற்கு காரசேரி கிராமத்தில் அமையவுள்ள இந்த குவாரியினால் 10 கிலோமீட்டர் சுற்றியுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதால் இதனை வரவேற்கிறேன்.

6. **திரு. சின்னத்துரை, கவுன்சிலர், சேரகுளம்.**

- ❖ இந்த குவாரி அமைவதை வரவேற்கிறேன்.

7. **திரு. S. காந்தி, இராமானுஜம்புதூர்.**

- ❖ தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலர்களால் நடத்தப்படும் இந்த நிகழ்வில் பங்கு பெற்று பேச வாய்ப்பளித்ததில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், இந்த குவாரி அமைவதால் எந்தவித ஆட்சேபனையுமில்லை என்று உறுதியளிக்கிறேன்.

8. **திரு. உலகநாதன், அரசர்குளம்.**

- ❖ நாங்கள் அரசர்குளம் ஊரில் தி/ள். பொதிகை என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறேன். இதில், ஹாலோ பிளாக், பேவர் பிளாக், பென்சிங் மற்றும் கான்கிரீட் பொருட்கள் தயாரித்து வருகிறோம்.
- ❖ இந்த கல்குவாரி அமைவதனால் எங்களுக்கு தேவையான மூலப்பொருட்கள் மிகவும் எளிதாகவும், குறைந்த விலையில் கிடைக்கும் என்பதாலும், அதிகப்படியான வேலைவாய்ப்பினை உருவாக்கி கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் இந்த கல்குவாரியை நாங்கள் வரவேற்கிறோம்.

9. **திருமதி. சண்முகசுந்தரி, இராமானுஜம்புதூர்.**

- ❖ இந்த கல்குவாரி அமைவதால் எங்களுக்கு நன்மைகள் ஏற்படும், அன்புடன் வரவேற்கிறோம்

10. **திரு. உடையார், திமுக கிளை செயலாளர், மேல ஸ்ரீயந்தூர்.**

- ❖ இந்த கல்குவாரி அமைவதால் எந்த இடையூறுமில்லை. இந்த கல்குவாரி அமைவதால் நமக்கு பயன் ஏற்படும். தீமைகள் ஏதும் இல்லை.

11. **திரு. வானமாமலை, சின்னார்குளம்.**

- ❖ இந்த கல்குவாரி அமைவதால் 1000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதால் இந்த குவாரி அமைவதை மகிழ்ச்சியோடும் பெருமையோடும் பாராட்டுகின்றோம்.

12. **திரு. சதீஸ், சூழலியல் பாதுகாப்பு செயலர்.**

- ❖ உங்கள் ஆச்சார விவாதங்கள் மற்றும் கலாச்சாரங்களை மதிக்கிறேன். உங்கள் பிரச்சனைகளை தீர்த்து வைக்கும்படி அரசாங்கம் இந்த ஊரினை தத்தெடுத்துக் கொண்டு நிலையான வளர்ச்சியை உருவாக்குவதற்கு அதிகமான நிதியை ஒதுக்கிட வேண்டும்.

- ❖ உத்தியோகம், வேலை வாய்ப்பினை உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

- ❖ தகுதியுள்ள அனைத்து மக்களுக்கும் நிரந்தர வீடுகள் வழங்கிட வேண்டுமென அரசு உயர் நிலை அதிகாரிகளுக்கு மிகுந்த தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

- ❖ இந்த ஊர் சுற்றுச்சூழலுடன் மற்றும் பசுமையுடன் நிலையாக இருக்க வேண்டும் என்று சூழலியல் பாதுகாப்பு செயலாளராக கேட்டுக்கொள்கிறேன்.

- ❖ இந்த ஊரில் உள்ளவர்கள் அனைவரும் மரங்கள் வளர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மரங்கள் வளருங்கள் அவற்றை காப்பாற்றுங்கள். இந்த உரிமைகளை அவர்களுக்கு எவ்வித கட்டுப்பாடுமின்றி அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று அரசு உயர் நிலை அதிகாரிகளுக்கு மிகுந்த தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

- ❖ இந்த கல்குவாரி உரிமையாளர் அவர்களுக்கு உடனடியாக வேலைகளை தொடங்குவதற்கு அவர்களுக்கு வங்கி கடன்கள் வழங்கிட வேண்டுமென்றும், அவர்களின் கோப்புகளை அலுவலகங்களில் தேக்கி வைக்காமல் எவ்வித தாமதமின்றி சுற்றுச்சூழல் அனுமதி கொடுக்க வேண்டும் என்றும் அரசு உயர் நிலை அதிகாரிகளுக்கு மிகுந்த தாழ்மையுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

- ❖ இந்த கல்குவாரி உரிமையாளர் ஏழை மக்களுக்கு உதவுபவர். நீதி, நேர்மை, கட்டுபாட்டுடன் வேலை செய்பவர். இவர்கள் தங்கள் பணியாளர்கள் மட்டுமின்றி தனி நபராக பிறருக்கும் எத்தனையோ நன்மைகளை செய்கிறார். தகுதியுள்ள மாணவர்களுக்கு உயர் கல்வி பயில உதவிவருகிறார்.

- ❖ வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கிறார். நோயாளிகளுக்கு மருத்துவத்திற்கு உதவி வருகிறார். இவர்களால் எத்தனையோ குடும்பங்கள் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பயன் பெற்றுவருகிறார்கள். இது போன்று எத்தனையோ உதவிகளை செய்துவருகிறார்கள்.

- ❖ இந்த உரிமையாளர், புதிதாக தொடங்கவிருக்கும் இந்த கல்குவாரியினை வரவேற்பதோடு, ஆதரவு தெரிவித்து நன்றிகளையும், மனமார்ந்த வாழ்த்துக்களையும் கூறுகிறோம். நீங்கள் தொடங்கும் ஒவ்வொரு வேலைக்கும், மிகப் பெரிய வெற்றிகள் பெற நாங்கள் விரும்புகிறோம். உங்களை முன்னோடியாக கொண்டு இளைஞர்கள் தொழில் தொடங்கி வெற்றி பெற வேண்டுமென்றும் விரும்புகிறோம்.

- ❖ இந்த கல்குவாரி உரிமையாளர் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றும், உன்னதமான பதவிகளை அடைய வேண்டுமென்றும், மக்களுக்கு இது போன்ற சேவைகளை செய்ய வேண்டுமென்றும், மக்கள் இன்பமாக வாழவேண்டும் என்றும் சொல்லி விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

13. <u>திரு. அனித், வெட்டிக்குளம்.</u>

- ❖ இந்த கல்குவாரி அமைவதை நாங்கள் சந்தோசமாக வரவேற்கிறோம், ஏனெனில், இந்த வருடம் பெய்த மழை வெள்ளத்தால் சாலைகள் அனைத்தும் சேதமடைந்ததை நாம் அறிவோம்.

- ❖ நமக்கு அருகில் இருந்த குவாரிகள் உதவியோடு கற்கள், ஜல்லிகள் மற்றும் சரல்கள் கொண்டு சாலைகளை சரிசெய்தோம். இது நமக்கு

மிகவும் அவசியமாக பயன்பட்டது. இதனால் நமது ஊரில் இந்த கல்குவாரி அமைவதை நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

**II. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ) அவர்களின் நிறைவுரை**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ) அவர்கள் பொதுமக்கள் குவாரிகள் அமைவதை ஆதரித்து கூறிய கருத்துக்களான வேலைவாய்ப்புகள், பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரம் பெருகுதல் போன்ற கருத்துகள் அனைத்தும் உள்ளபடியே பதிவு செய்யப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகம் வாயிலாக தமிழக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்து வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

**III.** இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து இந்த திட்டம் அமைய ஆதரவு தெரிவித்து எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் (21 Nos) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு – III).

**IV.** இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து இந்த திட்டம் அமைய எதிர்ப்பு தெரிவித்து எழுத்து பூர்வமாக மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை.

**பொது மக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கையுடன் கீழ்கண்ட ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொது மக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட காணொளி அடங்கிய குறும்பதிவி (எண்ணம் - 2) இணைப்பு I-ல் இணைக்கப்பட்டுள்ளது.
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்றவர்கள் பற்றிய விபரம் இணைப்பு II-ல் இணைக்கப்பட்டுள்ளது.
3. இந்த திட்டம் அமைவதை வரவேற்று எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் இணைப்பு III-ல் இணைக்கப்பட்டுள்ளது.

29/01/2024

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ),
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
தூத்துக்குடி.

தனி மாவட்ட வருவாய் அலுவலர்,
(ISRO நில எடுப்பு),
தூத்துக்குடி.